இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம்
தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்

**வேளாண்மை அறிவியல் நிலையம்**

சிக்கல், நாகப்பட்டினம் மாவட்டம்

*****

*அன்புடையீர் வணக்கம்!*

கீழ்கண்ட செய்திக் குறிப்பினை தங்களின் மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

## ஒருங்கிணைந்த பண்ணையம் மற்றும் மீன்வளர்ப்பில் மேம்பட்ட தொழில்நுட்பங்கள் – திறன் மேம்பாட்டு பயிற்சி துவக்க விழா"

நாகப்பட்டினம் மாவட்டம், சிக்கல், வேளாண்மை அறிவியல் நிலையத்தில், ஹைதராபாத் தேசிய வேளாண் ஆராய்ச்சி மேலாண்மை நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த பண்ணையம் மற்றும் மீன்வளர்ப்பில் மேம்பட்ட தொழில்நுட்பங்கள் குறித்த ஐந்து நாட்கள் (08.05.2023 முதல் 12.05.2023 வரை) திறன் மேம்பாட்டு பயிற்சிகள் ஆதிதிராவிடர் வகுப்பைச்சார்ந்த விவசாயிகளுக்கு நடத்தப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் பொருட்டு 08.05.2023 இன்று பயிற்சியின் துவக்க விழா நடைப்பெற்றது. இவ்விழாவில் தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் கோ. சுகுமார் அவர்கள் கலந்துகொண்டு தலைமையுரையாற்றினார். இவ்வுரையில் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் அனைத்து தொழில்நுட்பங்களும் உள்ளடக்கிய செயல்விளக்க அலகுகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த செயல்விளக்க அலகுகளை விவசாயிகள் கண்டுணர்ந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொண்டார். இவ்விழாவில் தேசிய வேளாண் ஆராய்ச்சி மேலாண்மை நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் செ. சீனிவாச ராவ் அவர்கள் கலந்து கொண்டு பயிற்சியினை தொடக்கி வைத்து சிறப்புரை ஆற்றினர். மீன்வளர்ப்பு தொழில்நுட்பம், ஒருங்கிணைந்த பண்ணையம், பட்டு புழு வளர்ப்பு, காளான் வளர்ப்பு, பண்ணைக் குட்டையில் மீன்வளர்ப்பு, பயிர் சாகுபடி போன்றவற்றை ஒருங்கிணைந்த முறையில் கடைபிடித்து விவசாயிகள் தொழில்முனைவோராக ஆகவேண்டுமென கேட்டுக்கொண்டார். விவசாயிகள் உற்பத்திக்குழு அமைத்து ஒருங்கிணைந்து செயல்படவேண்டுமெனவும் கேட்டுகொண்டார். முன்னதாக தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் மா. ராஜகுமார் அவர்கள் வரவேற்புரை ஆற்றினர். தேசிய வேளாண் ஆராய்ச்சி மேலாண்மை நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானி முனைவர். எம். பாலகிருஷ்ணன் அவர்கள் பயிற்சியின் நோக்கம் மற்றும் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். மேலும், பயிற்சிக்கான தொழில்நுட்ப கையேடுகள் துணைவேந்தர் அவர்களால் வெளியிடப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் நாகை மாவட்டத்தைச் சார்ந்த 80 விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் அ. கோபாலகண்ணன் நன்றி உரை ஆற்றினார்.

மீன்வள விரிவாக்க தொழில்நுட்ப வல்லுநர் திரு. ஹினோ பெர்னாண்டோ மற்றும் தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் திரு. க. ரகு ஆகியோர் இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை செய்தனர். தொழில்நுட்ப வல்லுநர்கள் முனைவர் கோ.சந்திரசேகர், முனைவர் வே.கண்ணன், முனைவர் ஆ.மதிவாணன், பண்ணை மேலாளர் திரு.ரெ.வேதரெத்தினம், தொழில்நுட்ப திட்ட உதவியாளர் திரு. வீ. ஞானபாரதி, கணினி திட்ட உதவியாளர் திருமதி.கோ.ரம்யா ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஒப்பம்/XXX
திட்ட ஒருங்கிணைப்பாளர்